**தலைப்பு 288 - நில அளவையாளர் நாயகம் திணைக்களம்**

**.........................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**...........................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**......................................................**

நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலகிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

...............................................................................................................................

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

………………………………………………………………..........................…………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக

இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

………………………………………………………….……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

..............................................................

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

.................................................

திணைக்களம் உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ..................................... | ........................................... | .................... |
| அளவீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான ரூபா 66,000,000 தொகையானது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரை நாணயக் கடித்தினை திறப்பது மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் பொருள் இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை. | ரூபா 66,000,000 பெறுமதியான GNSS ரிசீவர்ஸ், 8C நில அளவை உபகரணங்களின் 30 தொகுதிகளை கொள்வனவு செய்தல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 03 ஆந் திகதி நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் நிலையான சொத்து மீதிகள் | கொள்வனவு செய்தல்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள நில அளவை உபகரணங்கள் கிடைக்காதிருந்ததனால் அவற்றினை நீக்குவதற்கும் தற்பொழுது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள |

உரிய பணம் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

நீக்கப்பட்டுள்ளன.

நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினையின் அடிப்படையில் இலங்கை வங்கியினால் ஐந்து கட்டங்களின் கீழ் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் ஐந்து நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் பொருட்களின் ஒரு பகுதியை எடுத்துவரும் உரிய கப்பல் இலங்கையை அடைந்திருந்தும் ஏற்றுக்கொண்டவாறு கொடுப்பனவு செய்தல் தாமதமடைந்ததனால் மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கட்டளைகளைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்த டொலரின் பெறுமதி அதிகரித்ததிருந்ததனால் அந்த மாற்றம் தொடர்பாக கம்பனிக்கு செலுத்தப்படுமாக இருந்தால் மாத்திரம் பொருட்களை வழங்கலாம் அவ்வாறு கொடுப்பனவு செய்யும் இயலுமை தொடர்பாக திறைசேரி செயலாளரிடம் ஆலோசனை வேண்டப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பணத்தை திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் செலுத்துவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணத்தை திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் செலுத்துவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

## 2 நிதி மீளாய்வு

............................

### 2.1 வரம்புகள் மீறப்படல்

.....................................................

அரசாங்க முற்பண செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள வரம்புகளை மிகைத்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................ | ..................... |
| நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் 28801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் “பீ” கணக்கில் ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆகக்குறைந்த பெறுவனவு வரம்பு ரூபா 134,000,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 129,849,423 ஆக இருந்ததனால் ஆகக் குறைந்த பெறுவனவு வரம்பினை ரூபா 128,000,000 ஆக திருத்துவதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் மூலம் நிதி அமைச்சருக்கு வேண்டுகோள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் இந்த அறிக்கைத் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. இன்று வரை நிதி அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. | உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

.......................................................................................................................

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

.................................

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ……………….. | …………….. | ………………….. | …… |
| 2021 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய நில அளவையாளர் நாயகத்தின் 6/2021 ஆம் இலக்க வெளிக்கள சபை | ஹோமாகம பிராந்திய அலுவலகத்தில் இருக்கும் அரசாங்க நில | ரூபா 7,800 இற்கு ஒரு வீட்டினை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் இயலுமை இல்லை. | கணவன் மற்றும் மனைவியாக ஒரே நிலையத்தில் கடமையினை |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | அளவையாளர்களுக்கிடையே கணவன் மற்றும் மனைவியாக கடமையாற்றுகின்ற இரண்டு குடும்பங்களுக்கு மத்தியில் அலுவலகம் பேணப்படுகின்றது எனக் குறிப்பிட்டிருந்த ஒரே நிலையத்திற்காக இருவருக்கும் ஒரு மாதத்திற்கு ரூபா 7,800 வீதமும் வீடு எனக் குறிப்பிடப்படும் நிலையத்திற்காக மற்றைய இருவருக்கும் ஒரு நபருக்கு ரூபா 7,800 வீதமும் தனித்தனியாக மாதாந்தம் அலுவலக வாடகை வழங்கப்பட்டிருந்தது. | கணவன் மற்றும் மனைவியாக இருந்த போதிலும் தனித்தனியாக அலுவலக வாடகைக்கு தகமை உள்ளனர். நிலையியல் கட்டளையின் முதலாவது அத்தியாயத்தின் 1.40 ஆம் பிரிவின் பிரகாரம் பகுதியாக வதிவிடப்படிக்கு சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | மேற்கொள்வதற்கு வாய்ப்பு காணப்படுவதனால் தனித்தனியாக மாதாந்த அலுவலக வாடகையினை பெற்றுக்கொள்வது தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யவேண்டியுள்ளது. |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

.....................................................

நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் ஹோமாகம பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தின் வாகனங்களின் உள்ளக மற்றும் வெளியக பழுதுபார்த்தல் நடவடிக்கைக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 1,292,556 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள்<br>...................................... | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்<br>................................. | சிபாரிசுகள்<br>..................... |
|---|---|---|
| (அ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் வெளி பழுதுபார்த்தல்களுக்காக கேள்வி அல்லது விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் உள்ளக பழுதுபார்த்தல்களுக்காக வாகனங்களின் பகுதிகளை கழற்றிய கராஜின் விலைகளின் நியாயத்தன்மை சம்பந்தமாக தகமைபெற்ற இயந்திர பொறியியலாளரிடமிருந்து ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளபட்டிருக்கவில்லை. அதன் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய மாகாணத்தின் பிரதான நகரத்தில் அமைந்துள்ள | பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) என்பவற்றிற்கு தொடர்பட்டதாகும்.<br><br>ஹோமாகம பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தில் வாகனங்களை திருத்தம் செய்தல் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்காக உரிய சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடமிருந்து பதில் கோரப்பட்டிருந்ததுடன் அந்த பதில் அனைத்துக்கும் இணங்கிக்கொள்ள முடியாததனால் சில ஒழுங்கீனங்கள் | விசாரணைகள் நடாத்தப்படுதல் வேண்டும். |

வாகனத்தை பழுபார்த்தல் சம்பந்தமாக சிறப்புத் தேர்ச்சி பெற்ற கராஜினைத் தெரிவு செய்வதற்கு பதிலாக இந்த வாகனத்திற்கு நகர எல்'லைக்கு வெளியே உள்ள ஒரு தனியார் கராஜ் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 ஆம் பிரிவின் பிரகாரம் பழுதுபார்ப்பதல்களுக்காக கராஜ் பதிவு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) WPLE - 3670 ஆம் இலக்க வாகனத்தை பரீட்சித்துப் பார்த்து போக்குவரத்து உத்தியோகத்தரால் நவம்பர் 17 ஆந் திகதி உடைந்த மற்றும் துருப்பிடித்த இடங்களை மாத்திரம் டிங்கர் செய்து பூச்சுப் பூசுவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் அது செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக ஹோமாகம பிராந்திய அலுவலகத்தின் நில அளவை அத்தியட்சகரினால் பாதுக்க பிரதேசத்திலுள்ள மூன்று கராஜ்களிலிருந்து திகதி குறிப்பிடப்படாத விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 280,000 தொகைக்கு அதில் ஒரு தனியார் கராஜிடமிருந்து உண்மையாக பழுது பார்த்தல் செய்யப்பட்டது என நில அளவை அத்தியட்சகர் மற்றும் சாரதியால் சான்றுபடுத்தப்பட்டு அத்திகதியிலேயே தயாரிக்கப்பட்ட வவுச்சர் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக விலைப்பட்டியலில் குறிப்பிட்ட முகவரியில் அவ்வாறான கராஜ் அமைந்திருக்கவில்லை என நிலைய பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு அவதானிப்பின் காரணமாக அக்கொடுப்பனவு இடம்பெற்றிருக்கவில்லை.

இடம்பெற்றிருக்குபுமாகவிருந்த ால் அவற்றினை இனங்கண்டு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அபிப்பிராயம் தெரிவிக்கிறேன். கணக்காய்வு அறிக்கையினையும் உரிய ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு அறிக்கையினை பிரதான உள்ளகக் காணக்காய்வாளரிடம் கோரப்பட்ட போதிலும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் சிபாரிசின் அடிப்படையில் தாபன விதிக்கோவையின் 48 ஆம் அத்தியாயத்தின் 29-3 ஆம் பிரிவின் பிரகாரம் தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தில் தொடக்க புலனாய்வுச் சபை நியமிக்கப்பட்டது. அந்த தொடக்க புலனாய்வு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உரிய கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு சில ஒழுங்கீனங்கள் இடம் பெற்றிருக்குமாயிருந்தால் அந்த உதத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் உங்களுக்கு தெரியப்படுத்தப்படும் என அறிவிக்கிறேன்.

விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (இ) மேலே (ஆ) பந்தியின் பிரகாரம் குறித்த தனியார் கராஜிடம் ரூபா 88,500 செலுத்தி 250-4728 ஆம் இலக்க வாகனத்தின் பழுதுபார்த்தல்கள் 2021 திசெம்பர் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது எனக் காட்டி அத்திகதியே கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு விலைப்பட்டியல் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வவுச்சர் ஹோமாகம பிராந்திய நில அளவை அத்தியட்சகர் மற்றும் வாகனத்தின் சாரதியினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) நிதிபிரமாணம் 135 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்களிலும் பல உத்தியோகத்தர்களினுடாக மேற்பார்வைக்கு உட்படும் வகையில் வேலைகள் பகிரப்படவேண்டிய போதிலும் இப்பழுது பார்த்தல்களுக்காக அங்கீகரித்தல், விலை மனுக்களை கோருதல், பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவராகச் செயற்படல், கொடுப்பனவுகளுக்காக சிபார்சு செய்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் கொழும்பு மாவட்ட அலுவலகத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் மேற்கொள்ளப்பட்டது. | | நி.பி 135 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் பல உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்கு உட்படும் வகையில் வேலையை பகிர்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

......................................

**3.1 தூர நோக்கும் செயற்பணியும்**

.......................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................. | ..................... |
| ‘‘காணி தகவல்களை வழங்குவதில் எப்போதும் முன்னிலை வகித்தல்’’ என்பதனை தூர நோக்காகக கொண்டு ‘‘தொழில்சார் நிபுணத்துவத்தினைக் கொண்ட சேவை நாட்டமுள்ள ஆட்களின் மூலம் சிறந்த நிலத் தகவல்களை வெளியிடுதலும் சேவைகளை வழங்குதலும்’’ என்பதனை செயற்பணியாகக் கொண்டு நில | ஒரு நில அளவையாளர் ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலை அளவுகள் 2007 ஆம் ஆண்டில் நில அளவையாளர் நாயகத்தின் 06/2007 ஆம் இலக்க வெளிக்கள சபை சுற்றறிக்கையின் மூலம் | நவீன நில அளவை தொழில்நுட்ப முறைகள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் மீளாய்வு செய்து திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் |

| | | |
|---|---|---|
| அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர்கள் பல்வேறு வகையான நில அளவைகளை மேற்கொள்வதுடன் எல்லைக் கற்களை நாட்டி நியதிச்சட்ட ரீதியான நில அளவைகளுக்கு மாதாந்த இலக்குகள் 20 காணித் தொகுதியாக இருந்ததுடன் காணித் துண்டுகளாயின் 30 ஆகும். ஏனைய நில அளவைகளுக்காக 30 ஹெக்டயர் அளவாகவும் அளவை செய்யப்படுகின்ற துாரம் 5 கிலோ மீற்றர்களாகவும் செயல்முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. 15 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்த அங்கீகாரமானது நில அளவை நுட்பங்கள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப ரீதியான மேம்படுத்தல்களுடன் மீளாய்வு செய்து திணைக்களத்தின் துார நோக்கு மற்றும் செயற்பணிக்கு இணங்க தரமான காணித் தகவல்களை வெளியிடுதலும் சேவைகளை வழங்குதலும் நாளது வரையாக்கப்பட்டிருக்காத போதிலும் 2018 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல்களின் கீழ் நவீன நில அளவை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தினால் ரூபா 430 மில்லியனுக்கு மிகைத்த பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. | திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நில அளவையாளர் பல்வேறு வகையான நில அளவைகளை மேற்கொள்வதுடன் எல்லைக் கற்களை நாட்டும் நியதிச்சட்ட ரீதியான காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நில அளவைகளுக்கான மாதாந்த இலக்கு 20 காணி தொகுதிகளாக இருந்ததுடன் காணித்துண்டுகளாயின் 30 ஆகும். ஏனைய நில அளவைகளுக்காக காணியின் ஹெக்டயர் அளவுக்கு இணங்கவும் செயல்முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. நில அளவையாளர் நாயகத்தின் 2015 இன் 3/2015 ஆம் இலக்க மற்றும் 2021 இன் 02/2021 ஆம் இலக்க வெளிக்கள சபை சுற்றறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய மாதாந்த வேலை அளவு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளின் மூலம் செயல்முன்னேற்றத்தை வழங்குவதில் சிக்கல் உருவாகியுள்ளது. | செயற்பணிக்கு இணங்க தரமான காணித் தகவல்களை வெளியிடுதல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 15 ஆண்டுகளுக்கும் முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்த அங்கீகாரமானது நாளது வரையாக்கப்படுதல் வேண்டும். |

## 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

**....................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **.....................................** | **............................................** | **.....................** |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்ய வேண்டியிருந்த நில அளவை கட்டளைகளின் எண்ணிக்கை 31,020 ஆக இருந்ததுடன் அதனுள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து இன்றுவரை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 31,020 நில அளவை வேண்டுதல்களை பூர்த்திசெய்யமுடியாது காணப்பட்டதுடன் இந்த வேண்டுதல்களில் தற்பொழுது நடவடிக்கை எடுப்பதற்கு | நிலுவையாகக் காணப்பட்டுள்ள நில அளவை கட்டளைகளை காலத்துக்கு பொருத்தமாக நிறைவேற்றுவதற்காக |

| | | |
|---|---|---|
| பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்த நில அளவை கட்டளைகள் 15,097 எண்ணிக்கையும் நில அளவைக்காக ஒப்படைக்கப்படாத நில அளவை வேண்டுதல்கள் 15,923 எண்ணிக்கையுமாகும். | அத்தியவசியமற்ற வேண்டுதல்கள்களை பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி தரவு முறைமையிலிருந்து நீக்குமாறு துறை தெரியப்படுத்தியுள்ளது. நில அளவை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக காணி அமைச்சுக்கு பிரேரணைத் தொகுப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தினால் முறையான வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**பெறுகைகள்**

**.........................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **......................................** | **....................................** | **.....................** |
| நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தினால் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் தளமாடியின் ஒரு பகுதி கொழும்பு பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருந்தும் கொவிட் நிலைமையின் அடிப்படையில் மிகுதியாக இருந்த கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 4,458,893 தொகையும் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,614,297 தொகையும் ஆக மொத்தமாக ரூபா 6,073,190 தொகை இதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) அலுவலகத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.4 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 2 மில்லியனுக்கு மிகைக்காத நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தம் மாத்திரம் சமூக அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்படலாம் என்பதனால் ஒரு ஒப்பந்தக்காரராகச் செயற்படாத திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் பதிவு செய்த திம்பிரிகஸ்யாய | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மற்றும் அலுவலகத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஆரம்பிக்கும் தேவை ஏற்பட்டதனால் ஒரே காலப்பகுதிக்குள் அனைத்தையும் முடிவுறுத்துவதற்காக கட்டிடப் பிரிவு மேல் மாகாண அலுவலகம் மற்றும் கொழும்பு அலுவலகத்திற்கு பெறுகை | அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் விலை மனுக்கள் கோருவதிலிருந்து ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றும் வரை வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசத்தில் அமைந்துள்ள 05 சமூக அபிவிருத்திச் சங்கங்களிடமிருந்து 07 ஒப்பந்தங்களாக விலை மனுக்கள் கோரப்பட்டு குறைந்த விலை சமர்ப்பித்த ஒரு ஒப்பந்தக்காரருக்கு 07 ஒப்பந்தங்களாக பகுதி பகுதியாக பிரித்து ரூபா 6,073,190 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | செய்யப்படவேண்டிய பகுதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது தலைமை அலுவலகத்தினாலும் மாகாண அலுவலகங்களினாலும் மாவட்ட அலுவலகங்களினாலும் பல்வேறு பகுதிகளுக்காக விலை மனுக்கள் கோரப்பட்டன. மிகுதி பெறுகை நடவடிக்கைகளின் போது பகுதியாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே விலை மனுக்களை கோரும் போது குறைந்த விலையைச் சமர்ப்பித்த சங்கத்திற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்குதல் இடம்பெற்றது. | |
| (ஆ) | பெறுகை கையேட்டின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சங்கங்களின் பொருத்தத்தன்மையை பரீட்சிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் சட்டரீதியான தன்மையும் இயலுமையினையும் உறுதிப்படுத்துவதற்கான நிபந்தனைகள் தொடர்பாக ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு முன்னர் திணைக்களத்தினால் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இந்த ஒப்பந்தத்தை வழங்கும் போது திணைக்களத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவினால் அந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்திற்காக வலை மனுக்களை கோருதல் மற்றும் வழங்குனரை தெரிவு செய்தலானது திம்பிரி கஸ்யாய பிரதேச செயலகத்தில் பதிவு செய்த சமூக அபிவிருத்தி சங்கம் மற்றும் ICTAD இல் பதிவு செய்த நிறுவனத்தையும் உள்ளடக்கிய வழங்குனர்களின் பதிவேட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டினை மேற்கொள்ளாது தொழில்நுட்ப குழுவினூடாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படுதல் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கிறேன். | பெறுகை கையேட்டின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய சங்கங்களின் பொருத்தத் தன்மையை பரீட்சிப்பதற்காக மற்றும் சட்டரீதியான தன்மையையும் இயலுமையையும் உறுதிப்படுத்துவதற்கான நிபந்தனை தொடர்பாக ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் திணைக்களத்தினால் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நி.பி 135 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் பல உத்தியோகத்தர்களின் வாயிலாக பரீட்சிப்புக்கு உட்படும் வகையில் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் இந்த நிர்மாணத்தின் மதிப்பீட்டினைத் தயாரித்தல், விலை மனுக்களை மதிப்பீடு செய்தலுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராக செயற்படல், நிர்மாண வேலையை மேற்பார்வை செய்தல், வேலை முடிவடைந்ததன் பின்னர் இறுதி விலைப்பட்டியலைப் பரீட்சித்து பணக் கொடுப்பனவிற்காக சிபார்சு செய்தல், வேலை முடிவடைந்தது என அறிக்கையை வழங்குதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டது. | கட்டிடங்கள் திருத்தம் செவய்தல் மற்றும் புதிய நிர்மாணங்களின் பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகத்தினால் பெயர் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் பெறுகை நடவடிக்கைகளின் போது உச்ச அளவில் இரகசியத்தன்மை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கட்டிட பிரிவிற்கு புதிய கட்டிட பரீட்சிப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதனால் பெறுகை நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மை மற்றும் இரகசியத் தன்மையை உச்ச அளவில் பேணுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நி.பி 135 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் பல உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்கு உட்படும் வகையில் வேலைகளைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வாயு சீராக்கி இயந்திரத்திற்காக ரூபா 590,400 தொகையும் 12 சிவிலிங் மின் விசிறிகளுக்காக ரூபா 134,400 தொகையும் 6 எக்ஸ்ஹோஸ்ட் மின் விசிறிகள் (Exhaust Fan) இற்காக ரூபா 100,734 தொகையும் ஆக மொத்தமாக ரூபா 825,534 தொகை செலுத்தப்பட்டிருந்தும் எதிபார்த்தவாறு உள்ளே வாயு சீராக்கம் பயன்படுத்தப்படுகின்றது என்பது அவதானிக்கப்படவில்லை | இந்த அலுவலகத்தை திட்டமிடும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் எங்களுக்கு தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் எங்களின் அறிவுக்கு எட்டிய வகையில் இரண்டு வாயு சீராக்கிகள் இரண்டு அறைகளுக்கு காட்டப்பட்டிருந்தது. அண்ணளவான ஒரு திட்டமாகும். அதில் அந்த வாயு சீராக்கிகளின் தொழில்நுட்ப விடயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அந்த குறிப்பிற்கு இணங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சித்து அந்த அறையின் பரப்பளவின் அடிப்படையில் உரிய வகையான 03 வாயு சீராக்கிகள் தேவை என சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. | வாயு சீராக்கம் காணப்படும் வகையில் மீண்டும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**.......................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ....................................... | ................................... | ...................... |
| (அ) ஆகாய நில அளவை நடவடிக்கைகளுக்காக நில அளவையாளர் திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 8,868,900 செலுத்தப்பட்டு உள்நாட்டு முகவர் நிறுவனமாகிய வரையறுத்த பூமி டெக் (தனியார்) கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆள் இல்லாத விமானம் (Unmanned Aerial Vehicle) 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி ஹபரண பிரதேசத்தில் இயந்திர கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகியதனால் முகவர் நிறுவனத்தின் மூலம் திருத்தம் செய்து 2019 மார்ச் 26 ஆந் திகதி மீண்டும் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏபரல் மாதம் இறுதி வரையும் நில அளவை நடவடிக்கைகளுக்காக இந்த விமானம் பயன்படுத்தப்படவில்லை. | உரிய விபத்து இடம்பெற்றதன் பின்னர் உபகரணம் வரையறுத்த பூமிடெக் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டள்ளதுடன் அதன் உற்பத்தி நாட்டுடன் தொடர்பு கொண்டு திருத்தங்களைச் செய்வதற்கு 18 மாதங்கள் எடுத்திருந்தது. முகவர் நிறுவனம் இந்த விமானம் விழுவதற்கு காரணம் தொழில்நுட்ப கோளாறு என்பதனை ஏற்றுக்கொள்வதற்கு சில காலம் எடுத்தது. அந்த விபத்து உத்தரவாத காலத்துக்குள் இடம்பெற்றதனால் அதற்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க உரிய திருத்தங்கள் செய்து தரப்பட்டிருந்த போதிலும் ஏனைய பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகளின் அடிப்படையில் இதனைப் பயன்படுத்துதல் தாமதமடைந்துள்ளது. | விமானத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) திருத்தங்கள் செய்ததன் பின்னர் 2019 ஏப்ரல் 18 ஆந் திகதி அந்த விமானத்துடன் கிடைத்த மின்கலம் செயற்படாததன் காரணமாக உபகரணத்தை செயற்படுத்த முடியாதிருந்ததுடன் 2019 யூலை 17 ஆந் திகதி வரை ஹயிபர்- எஸ்- ஆர் (Hipper - SR ) டொப் கோன் (Top Con) வகையான ஜி.எஸ்பி (GSP) உபகரணம் செயற்படாது காணப்பட்டது எனவும் 2021 மார்ச் 04 ஆந் திகதி வரை விமானத்திற்காக வழங்கப்பட்டிருந்த லெப்டொப் கணனி இயந்திரத்தின் திரையில் கோளாறுகள் | 2019 ஏப்ரல் மாதமளவில் விமானத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு மிகுதியாக இருந்த உலர்ந்த மின்கலன்கள் வீங்கி இருந்ததனால் விமானம் பறக்கமுடியாதிருந்தது. 2019 யூலை மாதம் 17 ஆந் திகதி வரை Hipper -SR Top Con வகையான GPS உபகரணத்தின் பகுதி (RTK தொழில்நுட்பத்தின் மூலம் GPS ஒருங்கிணைப்புக்களை சரிசெய்வதற்கு தேவையானது) செயற்டடாது காணப்பட்டதுடன் அந்த உபகரண பகுதியை பறப்பதற்கு முன்னர் உலர்ந்த மின்கலத்தை வைத்தல் | முறைப்படியான பராமரிப்பினை எதிர்பார்க்கக் கூடிய வகையில் துணைக் கருவிகளுடனான சேவைகளுக்காக உடன்படிக்கை செய்து கொள்ளுதல் வேண்டும். |

காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தும் நில அளவையாளர் திணைக்களம் முகவர் நிறுவனத்துடன் இந்த விமானத்தினை பழுதுபார்த்தல், சேவை செய்தல், மற்றும் பராமரித்தலுக்காக உடன்படிக்கை செய்துகொள்ளவில்லை.

வேண்டும். எனினும் அதில் உள்ளடங்கியுள்ள (Inbuilt) உலர்ந்த மின்கலம் (இது இந்த உபகரணத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சாதாரண சந்தையில் உடனடியாக கொள்வனவு செய்யக்கூடிய ஒரு உபகரணமல்ல) வைக்கப்படாததனால் விமானம் பறந்ததன் பின்னர் சரியாக GPS ஒருங்கிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ள சந்தர்ப்பம் இல்லாது போயிருந்த போதிலும் விமானத்தினால் நிழற்படங்களை எடுப்பதற்கு உள்ள இயலுமைக்கு தடைகள் காணப்படவில்லை. அது சம்பந்தமாக பூமிடெக் நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டது இந்த விமானத்துடன் வழங்கப்பட்ட லெப்டொப் கணனியின் திரையின் மீது அடிக்கடி ஒளிக் கீறல்கள் வருகின்ற கோளாறு இன்னும் காணப்படுகின்ற போதிலும் அந்த விமானம் பறப்பதற்கு தடைகள் இல்லை. இது சம்பந்தமாக திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
2020 நவம்பர் 17 ஆந் திகதி பூமிடெக் நிறுவனத்தினால் 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்காக துணைக்கருவிகள் இன்றி சேவை செய்தல் உடன்படிக்கைக்கு விலை மனுக்கள் வழங்கப்பட்டிருந்தும் துணைக்கருவிகள் இன்றி சேவை உடன்படிக்கையின் மூலம் முறையான பராமரிப்பினை எதிர்பார்க்க முடியாததனால் சேவை செய்வதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
அவ்வாறே இந்த உபகரணத்தை காப்புறுதி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தும் அது வெற்றியளிக்கவில்லை.

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 01 ஆண்டிலிருந்து 30 ஆண்டுகளுக்கு மேறபட்ட காலப்பகுதியினுள் 49 சந்தர்ப்பங்களின் போது வாகனங்கள், நில அளவை உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகிய சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள ரூபா 6.8 மில்லியன் நட்டம் சம்பந்தமாக நி.பி 108 இற்கு இணங்க பரீட்சிப்புக்களை மேற்கொண்டு நி.பி 109 இற்கு இணங்க ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். இந்த பரீட்சிப்புக்களை துரிதமாக முடிவுறுத்துவதிலுள்ள சிக்கலினால் எதிர்காலத்தில் காணப்படும் நிலைமையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நட்டங்கள் சம்பந்தமாக நி.பி 108 இற்கு இணங்க பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு நி.பி 109 இற்கு இணங்க ஏடுகளிலிருந்து நீக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் இடம்பெற்ற 09 வாகன விபத்துக்களது நட்டங்களின் மொத்தம் ரூபா 1,053,475 தொகையும் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 13 வாகன விபத்துக்கள் தொடர்பான மொத்த நட்டம் ரூபா 4,570,757 தொகையும் 1989 இலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை நில அளவை உபகரணங்கள் மற்றும் ஏனைய சேதமடைதல் சம்பந்தமான 26 சம்பவங்கள் தொடர்பான மொத்த நட்டம் ரூபா 2,390,893 தொகையுமாக ரூபா 8,015,125 மொத்த தொகை பதிவழிக்கப்படாது அறவிட வேண்டியவையாக முன்கொண்டு வரப்பட்டிருந்த மீதி காணப்பட்டிருந்தும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது ரூபா 490,341 மாத்திரமாகும். ஒன்பது ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 338,310 தொகையாக இருந்ததுடன் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 152,031 தொகையுமாகும். தற்பொழுது பத்து ஆண்டுகளுக்கு குறைந்த நட்டங்களில் 57,000 முடிவடைந்தும் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நட்டங்களில் ரூபா 92,623 அறவிடப்பட்டும் உள்ளன. நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடங்கியுள்ளவைகளுக்கான தகவல்கள் வழங்கப்படாத நட்டங்கள் தொடர்பாக கட்டிடங்கள் பிரிவின் சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தி அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ii-1 மற்றும் ii-2 இலுள்ள தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டமையானது | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் ஆரம்ப மீதியாக அதுவரை தீர்த்துவைக்கப்படாத விடயங்களை குறிப்பிட்டு உரிய தகவல்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆண்டிற்குள் இடம்பெற்ற சம்பவம் என்பதனால் கடந்த ஆண்டுகள் தொடர்பாக இந்த ஆண்டின் போது தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் மீதியை வெளிப்படுத்துவதற்காக படிவத்தில் ஒரு இடம் அறிமுகப்படுத்தப்படாத போதிலும் எங்களால் பேணப்படுகின்ற நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் அவை முறைப்படியாக பதியப்பட்டுள்ளன. | |
| (இ) ரூபா 8,015,125 பெறுமதியான இந்த பதிவழிக்கப்படாது முன்கொண்டு வரப்பட்ட மீதிகளில் மூன்று ஆண்டுகளுக்கும் ஒன்பது ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குறிய ரூபா 3,473,623 தொகையும் பத்து ஆண்டுகளுக்கும் முப்பது ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 3,488,027 தொகையுமாகும். அவை தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசேதனையின் போது இந்த தாமதத்திற்கு பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) பதுளை பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்திற்குரிய 61-6600 ஆம் இலக்க வாகனம் 2015 யூன் 11 ஆந் திகதி கொழும்பினை நோக்கி வருகை தந்த போது இரத்தினபுரி பிரதேசத்தில் விபத்திற்கு உள்ளாகியமை தொடர்பாக 2015 ஒக்தோபர் 06 ஆந் திகதிய நி.பி 104(4) இறுதி அறிக்கைக்கு இணங்க ரூபா 1,052,825 மொத்த நட்டம் தொடர்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் நில அளவையாளர் நாயகத்தின் வேண்டுதலின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் நியமிக்கப்பட்ட பரிசீலனை சபையின் 2021 | 61-6600 ஆம் இலக்க வேன் 2015 யூன் 11 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியமை தொடர்பாக முதலாவதாக நியமிக்கப்பட்ட நி.பி 104(4) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நி.பி 104(4) அறிக்கையில் விபத்துக்கு பொறுப்புக் கூற வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் நேரடியாக அந்த விபத்துக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களா என்பது உறுதிப்படுத்தப்படாததனால் மீண்டும் ஒரு குழுவினை நியமிக்குமாறு முன்னாள் நில அளவையாளர் நாயகத்தினால் கட்டளையிடப்பட்டது. | சாரதியிடமிருந்து உரிய அறவீடுகளை மேற்கொள்வதற்கும் கராஜிற்கான ரூபா 243,450 நட்டத்தினை வேண்டி பெல்மடுல்ல மாவட்ட நீதிமன்றத்தில் திணைக்களத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கினை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தொபர் 12 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் வாகனத்தின் திருத்தல் செலவாகிய ரூபா 540,000 தொகையில் 50 சதவீதமான ரூபா 270,000 தொகையினை மாத்திரம் சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. கராஜிற்கான ரூபா 243,450 நட்டத்தினை வேண்டி பெலமடுல்ல மாவட்ட நீதிமன்றத்தில் திணைக்களத்திற்கு எதிராக ஒரு வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | அதற்கிணங்க மீண்டும் நி.பி 104(4) சபையை நியமிப்பதற்கான அங்கீகாரத்திற்காக 2016 யூன் 02 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிய நி.பி 104(4) சபை 2020 திசெம்பர் 11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட 104(4) அறிக்கையில் வாகனத்தின் திருத்த செலவான ரூபா 540,000 தொகையில் 50 சதவீதத்தினை சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டு அமைச்சு செயலாளரின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. அத்தீர்மானத்தின் பிரகாரம் நட்டத்தின் மிகுதியான 50 சதவீதத்தினை எதிர்காலத்தில் திணைக்களத்தின் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். இதற்காக விசாரிக்கப்படும் வழக்கின் முழுமையான விசாரணையும் முடிவடைந்து வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (ii) | மத்திய மாகாணத்தின் திகன பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 54- 2286 ஆம் இலக்க கெப் வாகனம் 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி நில அளவை நடவடிக்கைகளுக்காக மீமுரே பிரதேசத்திற்கு சென்ற வேளையில் சாரதியினால் குடி போதையில் வாகனத்தை ஓட்டியிருந்ததனால் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இதில் மொத்த நட்டம் ரூபா 650,800 ஆக இருந்தது. நி.பி | 54-2286 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து தொடர்பாக நி.பி 104(3) அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா 615,800 மதிப்பீடு அண்ணளவான மதிப்பீடாகும். அது ரூபா 500,000 இற்கு மேற்படுமாகவிருந்தால் நி.பி 104 (4) சபையினை நியமிப்பதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள து. அதற்கிணங்க நி.பி 104 | உரிய நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 104 (1) (ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் அல்லது நட்டம் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் 104(4) இறுதி பரீட்சிப்பு சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாததுடன் இது வரை நட்டம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | (4) பரீட்சிப்பு அறிக்கைக்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் 2022 யூன் 15 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் திருத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முழுப்பணமும் மற்றும் இழுத்துக் கொண்டு செல்வதற்கு செலவு செய்யப்பட்ட ரூபா 35,000 பணம் எதிர்காலத்தில் சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) | NWNB - 2339 ஆம் இலக்க தனியார் பஸ்ஸில் நேருக்கு நேராக மோதி வட மேல் மாகாண அலுவலகத்தின் 250-4741 ஆம் இலக்க கெப் வாகனத்திற்கு கல்கமுவவில் நட்டம் ஏற்பட்டிருந்தது. பஸ் சாரதிடமிருந்து அல்லது அவரின் காப்புறுதி முகவரிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நி.பி 104(4) இறுதி பரீட்சிப்பு சபை 2018 பெப்ரவரி 02 ஆந் திகதி சிபாரிசு செய்திருந்த போதிலும் ரூபா 820,850 செலவு செய்து அரசாங்க பணத்தில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. பஸ்ஸின் சாரதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்காக குற்றப்பத்திரத்தின் பிரதி தலைமை அலுவலகத்தின் பணிப்பாளருக்கு (நிருவாகம்) அனுப்பியதனைப் போல மேல் மாகாண அலுவலகத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகருக்குத் தெரியப்படுத்தியிருந்தும் 2022 ஏப்ரல் இறுதிவரை அனுப்பிவைக்கப்பட்டிருக்காததுடன் பஸ்ஸின் இலக்கமும் பிழையாக பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. விபத்து இடம்பெற்று 06 ஆண்டுகளை மிகைத்திருந்தும் நட்டத்தினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 250-4741 ஆம் இலக்க கெப் வாகனம் 2016 மே 19 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகியமை குற்றப்பத்திரிகை சட்ட நடவடிக்கைகளுக்காக 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி சட்டப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) 2021 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக பரீட்சித்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | திலத்தலாவை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் 2021 சனவரி 06 ஆந் திகதி PE-4187 ஆம் இலக்க வாகனம் ஒரு தனிப்பட்ட தேவைக்காக ஓடிக்கொண்டிருக்கையில் வின்ஸ்கிரீன் உடைந்துள்ளதுடன் நட்டம் ரூபா 139,917 ஆகும். உரிய உத்தியோகத்தர் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நட்டத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | PE-4187 ஆம் இலக்க வாகனம் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியமை தொடர்பாக மீண்டும் காப்புறுதி கோவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணம் டொயாடா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு செலுத்திய பணம் தொடர்பாக தொலைபேசியின் மூலமும் எழுத்து மூலமும் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்களை துரிதமாக பெற்று உரிய மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கிறேன். | உத்தியோகத்தர் சம்பந்தமான தொடக்க விசாரணை மற்றும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் நட்டத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மத்திய மாகாணத்தின் தொழுவ பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தின் 51- 0364 ஆம் இலக்க வாகனமும் PB-4705 ஆம் இலக்க தனியார் வேனும் நேருக்கு நேர் மோதியதனால் கண்டியில் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் நி.பி 103 (1) (ஆ) இன் பிரகாரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. வேனின் உரிமையாளரால் கெப் வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 57,000 நட்டத்தை பணமாக செலுத்துவதற்கு இணங்கிக் கொண்டதனால் வேனின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை என மத்திய மாகாண நில அளவையாளர் நாயகத்தினால் இணங்கிக் கொண்டு திருத்தம் செய்வதற்காக கோகாலை பிரதேசத்திலுள்ள தனியார் கராஜிக்கு நேரடியாக பணத்தை | 51 -0364 ஆம் இலக்க வாகனம் விபத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் ஓடுவதற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நட்டம் சம்பந்தமாக நி.பி 104(4) விசாரணை அறிக்கை முடிவடையும் கட்டத்தில் காணப்படுகின்றது. அதற்காக அங்கீகாரம் வழங்கியதன் பின்னர் உரிய அதிகாரியின் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நட்டம் சம்பந்தமாக நி.பி 104(4) விசாரணை அறிக்கையும் உரிய அதிகாரியின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கி 06 மாதங்கள் கடந்திருந்தும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது இது சம்பந்தமாக நி.பி 104(4) இறுதி விசாரணையை மேற்கொள்வதற்கு 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்தும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (III) | 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதி நில அளவை நடவடிக்கைக்காக பதுளை பிரதேசத்திற்குச் சென்ற போது தலைமை அலுவலகத்தின் புவியியல் பிரிவின் PD -9196 ஆம் இலக்க கெப் வாகனம் வீதியின் இடதுபக்கம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது UPLE -7355 ஆம் இலக்க தனியளார் கென்டேனர் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் பொலிஸில் முறைப்பாடு செய்யும் போது வாகன இலக்கம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் சாரதியின் எதுவித தகவலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. 2021 நவம்பர் 02 ஆந் திகதி வாகனத்தின் முகவர் நிறுவனமான டொயாடா கம்பனியால் ரூபா 203,930 மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை திருத்தம் செய்யவோ அல்லது காப்புறுதிக் கம்பனியிடமிருந்து நட்டம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | PD - 9196 ஆம் இலக்க கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் இல்லாததன் காரணமாக இன்று வரை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க எதிர்காலத்தில் திருத்தங்கள் செய்ததன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய கிரயத்திற்கு இணங்க இறுதி நட்டத்தை சரியாக உள்ளடக்கி நட்டப்பரிசீலனையை மீண்டும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | திருத்தங்களை மேற்கொண்டு உரிய காப்புறுதி கம்பனியிடமிருந்து நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கில் ஆண்டின் இறுதியளவில் ரூபா 8,723,923 நிலுவைக் கடன் மீதி காணப்பட்டதுடன் அதில் 05 ஆண்டுகளை மிகைத்த மொத்தமாக ரூபா 3,661,070 மீதி காணப்பட்டது. | அவதானிப்பு சரியானது. இன்றுவரை அதில் ரூபா 1,175,168 கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஐந்து ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 19,801 ஆகும். அதற்கு மேலதிகமாக நி.பி 113 இன் கீழ் நீக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 72,685 ஆகும். அதற்கிணங்க இன்னும் தீர்த்து வைக்க வேண்டியுள்ள கடன் மீதி ரூபா 7,476,070 ஆகும். அதில் ரூபா 183,860 தொடர்பான கடன் மீதி தவணை அடிப்படையில் அறவிடப்பட்டு வருகின்றது. | நிலுவையான கடன் மீதியினை தீர்த்துவைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அங்கீகரித்த பதவியணிக்கு நேரொத்ததாக சிரேஷ்ட மட்டத்தின் 23 சதவீதமும், மூன்றாம் மட்டத்தில் 14 சதவீதமும், இரண்டாம் மட்டத்தில் 10 சதவீதமும், ஆரம்ப மட்டத்தில் 27 சதவீதமுமாக ஒட்டுமொத்த பதவியணியின் வெற்றிடங்கள் 24 சதவீதமாகும். | ஒவ்வொரு ஆண்டிலும் இலக்கினை தயாரிப்பது அங்கீகரித்த பதவியணியினை அடிப்படையாக் கொண்டு அல்லாது ஆண்டின் போது சேவையில் ஈடுபட்டுள்ள உள்ளபடியான பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு என தயவாக தெரிவிக்கின்றேன். | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |